11th September 1958]

Sri M. JAGANNATHAN : திண்டிவனம் தாலூகாவில், உலக்கூர் பிர்க்காவில் கீழ்க்கரணி என்ற இடத்தை சமீபத்தில் அமைச்சர் அவர்கள் கூட பார்வையிட்டார்கள். இந்த இடத்தில் இன்னும் ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. அதிகமாக காலதாமதம் ஆகிறது இன்னும் பல இடங்களிலும் இம்மாதிரி வீடுகள் கட்டிக்கொடுப்பதில் காலதாமதம் ஆகிறது. காலதாமதம் ஆகாமல் கூடிய சீக்கிரம் ஏழை ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : எந்தெந்த இடத்தில் வீடுகள் கட்டுவதற்காக கலெக்டர் சிபார்சு செய்கிறாரோ, அந்த இடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. வெகு துரிதமாகவே வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

Sri A. V. P. ASAITHAMBI : இதுவரையிலும் ஹரிஜனங்களுக்கு பல இடங்களில் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கும் வீடுகள் சிறிய காற்றிற்கும், மழைக்கும் கூட விழுந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்று ஏற்கனவே புகார் வந்திருக்கிறதா ? அப்படி, புகார் வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்காக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகளையாவது நல்ல முறையில் கட்டுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN : இம்மாதிரி புகார் ஒன்றும் வரவில்லை. அங்கத்தினர் அவர்களின் அபிப்பிராயம் தான் அப்படி இருக்கிறது என்று நான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. கட்டப்படும் வீடுகளெல்லாம் நன்றாக கட்டப்படுவதற்குத்தான் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒரு சில இடங்களில் ஏதாவது குறை இருந்தால், பூராவும் அம்மாதிரி விழுந்துவிடுகிறது என்று சொல்லமுடியாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : கனம் ஆர். வெங்கடராமன் மேல் சபைக்கு போகவேண்டியிருப்பதால், அவர்கள் பதில் சொல்லவேண்டிய கேள்விகளை முதலில் எடுத்துக்கொள்ளுகிறேன்.

Co-operative Building Societies

* 163 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கூட்டுறவுக் கட்டிடச் சங்கங்களின் கடன் மனுக்களை ஜில்லா டிப்புடி ரிஜிஸ்ட்ரார்களே சாங்ஷன் செய்யும்படி பவர் கொடுக்க உத்தேசமுண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Rural Housing Programme

* 169 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any communication has been received from the Ministry of Community Development, Government of India, regarding the selection of villages for the execution of rural housing programme in the State; and

(*b*) if so, the action taken thereon?

[11th September 1958

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Thirty-five villages have been selected in the Community Development and National Extension Service areas in the Kanyakumari, North Arcot, Tirunelveli, Ramanathapuram, Tiruchirappalli, Tanjore and Coimbatore districts.

Selection of 70 more villages is under the consideration of the Government.

SRI M. JAGANNATHAN : May I know on what basis the selection of villages is made?

THE HON. SRI R. VENKATARAMAN : On the recommendation of Collectors.

Slum clearance

* 172 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have any scheme for—

(i) clearing the slum on the lake bund abutting Mount Road from the Sun Theatre to the Collector's Office at Saidapet; and

(ii) rehabilitating the dwellers therein elsewhere?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) and (ii) Apparantly the member refers to the Mambalam Tank Bund area where 1,800 families are living in huts. It is proposed to rehabilitate 600 families in the same area, and to shift and resettle the remaining families in the North Saidapet, Trustpuram and Puliyur Scheme areas of the City Improvement Trust.

SRI K. VINAYAKAM : இங்கு இப்பொழுது குடியிருப்பவர்களில் 600 குடும்பங்களுக்கு மட்டும் இங்கேயே இடம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கு இருக்கும் 1,800 குடும்பங்களில் எந்த 600 குடும்பங்கள், இங்கு இடம் பெறவேண்டுமென்பது பற்றி அவர்களுக்குள்ளேயே சச்சரவுகள் இருக்கின்றன. இதை அரசாங்கம் எப்படி தீர்த்துவைக்கப் போகிறார்கள்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு 7, 8 "கன்டிஷன்கள்" போட்டிருக்கிறோம். இந்த "கண்டிஷன்களுக்குள்" யார் வருகிறார்களோ, அவர்களுக்கு அந்த இடத்தில் இடம் கொடுக்கப்படும். அந்த கண்டிஷன்கள் பின்வருமாறு :—

(*a*) The families who are prepared voluntarily to shift elsewhere may be eliminated.

(*b*) The families who are in habitual default of full competitive rent irrespective of their age of encroachment may be eliminated.

(*c*) The families who are living in the area for 7 years and more may be selected.

(*d*) The families who have their work-spot very near the Tank Bund may be selected.

(*e*) The families who have paid in full the full competitive rents or whose percentage of arrears is small, may be selected.